**திருக்கோவில் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இவற்றை மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அனைத்து மோட்டார் வாகனங்களும் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இவற்றின் பெறுமதியானது மீள்மதிப்பிடப்பட்டு எதிர்வரும் காலத்தில் கணக்குகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 98,096,343 பெறுமதியான 04 கணக்குவிடயங்களுக்குரிய காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் | 2011ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் இருந்து இவை பிரித்தெடுக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் முற்பணப் பதிவேடு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | வையாகும். இவற்றிற்கான ஆவணச்சான்றுகளைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 204,744 பெறுமதியான 26 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவை அனைத்தும் 2020ஆம் ஆண்டு கணக்கறிக்கையில் சீர்செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்தும், கட்டிட விண்ணப்பம் தொடர்பில் அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் அக்கணக்கில் வைப்பிலிடப்படாமல் சபையின் செயற்பாட்டுக் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு செலவு செய்யப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர அபிவிருத்தி தொடர்பான சேவைக்கட்டணங்கள் நகர அபிவிருத்தி கணக்கிலே வைப்பிலிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

# 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,710,792 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,932,720 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019<br>மதிப்பிடப் பட்ட வருமானம் | 2019<br>பட்டியலிடப் பட்ட வருமானம் | 2019<br>சேகரிக்கப் பட்ட வருமானம் | 2019<br>திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2018<br>மதிப்பிடப் பட்ட வருமானம் | 2018<br>பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018<br>சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018<br>திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ------------- | ------------ | ------------- | -------------- | ------------- | ------------ | ------------- | -------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,000 | 610 | 610 | 2,110 | 13,500 | 4,000 | 9,110 | 2,112 |
| வாடகைகள் | 3,735,000 | 5,015,021 | 5,330,766 | 2,158,397 | 3,425,000 | 3,850,642 | 3,928,518 | 2,474,142 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 725,000 | 674,845 | 682,075 | -- | 667,500 | 697,410 | 708,135 | 7,230 |
| ஏனைய வருமானம் | 9,316,000 | 9,685,188 | 9,685,188 | -- | 4,216,000 | 11,362,572 | 11,362,572 | -- |
| | 13,785,000 | 15,375,664 | 15,698,639 | 2,160,507 | 8,322,000 | 15,914,624 | 16,008,335 | 2,483,484 |

### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை வருமான நிலுவை ரூபா 895,315 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 டிசெம்பர் 31இல் உள்ளவாறான குத்தகை நிலுவை ரூபா 1,263,082 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | இறைச்சிக்கடை குத்தகை நிலுவை தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்க முடியாததுடன் ஏனையவற்றை மத்தியஸ்த சபை முறைப்பாட்டுடன் அறவிடப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க | சபைக்கு பொருத்தமான விடயங்கள் தொடர்பில் துணைவிதிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | உபவிதிகளை உருவாக்குவது தொடர்பாக 2019 மே மாத சபை அமர்வில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான உபவிதிகளை உருவாக்குவதென்றும், ஆக்கப்பட்ட உபவிதிகளில் திருத்தங்களைச் செய்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கான |

| | | |
|---|---|---|
| வேண்டும். இருந்தும், ஒரு விடயம் தொடர்பில் மாத்திரமே உபவிதி உருவாக்கப்பட்டிருந்நதது. | | நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இணங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | தற்போதிலிருந்து 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிலைபேறான அபிவிருத்தியிளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அளவிடுவதற்கான குறிகாட்டிகளை தொடர்பான பயிற்சிகளினை எதிர்காலத்தில் அறிந்துகொண்டு அவற்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) 2017, 2018 மற்றும் மீளாய்வாண்டு ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் இணங்காணப்பட்டு அவற்றை அடைவதற்கான நிதியேற்பாட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலக்குகள் இணங்காணப்பட்டு அதற்கான நிதியேற்பாட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வேறு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டு 04 முதல் 13 ஆண்டுகளாக 05 வாகனங்கள் மற்றும் 02 இழுவைப்பெட்டிகள் உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்ப டுகின்ற வாகனங்களை உரிமை மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் இவை நிவர்த்திசெய்யப்பட்டு வாகன உரிமையானது சபையின் பெயருக்கு மாற்றப்படும். |
| (ஆ) 2017ஆம் ஆண்டுக்கான பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் விநாயகபுரம் பேருந்து நிறுத்துமிட நிர்மாண | இக்குறித்த வேலையினை பூரணப்படுத்தி | இப்பஸ்த்தரிப்பு நிலையத்திற்கான மீதி வேலையானது 2020ஆம் |

| | | |
|---|---|---|
| வேலையானது ரூபா 167,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு ரூபா 76,165 செலவு செய்யப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டமையினால் இக்குறித்த வேலையானது பூரணப்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | மக்களின் பயன்பாட்டிற்கு விட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டு நிதியேற்பாட்டினூடாக நிறைவுசெய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 உத்தியோகத்தர்களின் ஊழியர் கடன் நிலுவை ரூபா 236,170 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அவர்களது மரணப்பணிக்கொடையில் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான வாகனங்களுக்கான வாகனப் பாதுகாப்பிடம் போதாமையால் சபை அலுவலக முன் விதியில் உரிய பாதுகாப்பின்றிய நிலையில் காணப்படுகின்றது. | வாகனங்களை பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கான நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் வாகனப்பாதுகாப்பு இடம் அமைக்கப்படும். |

### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படட் விநாயகபுரம் பொதுச் சந்தைக்கட்டிடமானது பொதுமக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் நிர்மாணிக்கப்பட்டமையினால் 02 கடையறைகள் விளைவற்றுக் காணப்படுகின்றது. | சபையின் சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மக்கள் பொதுவாக கொள்வனவு செய்ய தம்பிலுவில் மத்திய சந்தைக்கு வருகை தருவதால் விநாயகபுரம் சந்தைக்கு மக்கள் வருகை குறைவாக உள்ளது. எனினும் மக்களை மீள அச்சந்தைக்கு வருகைதர வைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. |
| (ஆ) தம்பிலுவில் மத்திய சந்தையின் கடையறைகளில் 04 கடையறைகள் ஆறு ஆண்டுகளிற்கு மேலாக பாவனையற்றுக் காணப்படுகின்றது. | சபையின் சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாடிக்கடையறைகள் வியாபாரத்திற்கு பொருத்தமற்றது எனக் கருதுவதனால் அக்கடைகளைப் வாடகைக்கு வழங்க முடியாமலுள்ளதுடன், வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2020 இல் இவற்றை முறையாக கூட்டி தீர்மானங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். |